...னிதர்களா
இவர்கள்?

...ணினத்திற்கு
வழங்கிய தீர்ப்பு!

...தை எப்படி
வாங்கவேண்டும்?

MANGAYAR MALAR
ஏப்ரல் '83 ரூ.1-50

மங்கையர் மலர்

வெற்றி வீரன்

அடிப்படை ஆரோக்கியம்
வெற்றியின் முதற்படி -

உங்கள் குழந்தைக்கு
போலியோ சொட்டு மருந்து அளித்து
இளம்பிள்ளை வாத நோயிலிருந்து
பாதுகாப்பு அளித்திடுங்கள்.
மருத்துவரின் மேற்பார்வையில் போலியோ
சொட்டுமருந்து, டிரிபிள்ளாண்டிஜென்,
தட்டம்மை தடுப்பு ஊசியும் அளிக்கப்படும் இடம்:

DADHA

தமிழ்நாடு தாதா
பார்மாசூடிக்கல்ஸ் லிமிடெட்

10, பத்மாவதியார் சாலை, ஜெய்பூர் நகர்
(ஆவின் விளக்கு மருகி அருகில்)
சென்னை-600 086. தொலைபேசி 810646

ஞாயிறு : காலை 8.30 முதல் பகல் 12.30 வரை
புதன் : காலை 8.00 முதல் பகல் 10.00 வரை
சனி : மாலை 3.00 முதல் 6.00 வரை

madhu ads-248

மங்கையர் மலர்

ஏப்ரல் 1984

ட்டையில்...

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவி வசந்தி. இவ்வாண்டின் மிகச் சிறந்த மாணவியாகத் தேர்த்தெடுக்கப்பட்டுள்ள இவரை மங்கையர் மலர் சார்பில் வாழ்த்து கிறோம்.

வண்ணப்படம்: பி. ஈ. ரமணன்

சந்தா விவரம்

தனிப்பிரதி ரூ. 1-50
ஆண்டுச் சந்தா ரூ. 18/-
ஆறு மாத சந்தா ரூ. 9/-

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: Manjula Ramesh

இந்தியாவிலேயே முதன்முறையாக ISI முத்திரையுடன் வெளிவரும் ஒரே ஷாம்பூ

வெல்வெட் ஷாம்பூ

இது ஒரு டாக்டரால் உருவாக்கப்பட்டது.

In a wide range: Lemon, Henna, Darling, Egg, Doctor & Doctor Plus

75P

Max. Retail Price 75 P. Egg 90 P.

தமிழ்நாடு மொத்த விற்பனையாளர்கள்
மேனோ
எண்டர்பிரைஸஸ்
11B, பீச் ரோடு
கடலூர் 607 001
போன்: 211, 867

வெல்வெட் ஷாம்பூ
உங்கள் கேசப் பராமரிப்பிற்கு
டாக்டர் காட்டும் கல்வழி

Concept M

ஸ்ரீகலா நிகேதன் ஆதரவில் சமீபத்தில் குமாரி ஜெயலட்சுமி சென்னையில் நாட்டிய விருந்தளித்தார். நாட்டிய கலா பூஷணம் ஸ்ரீமதி இந்திரா ராஜன் குருவென்பதையும், கே. பி. கிட்டப்பா பிள்ளையிடம் பயின்றவர் என்பதையும், தேமமாலினி குழுவில் இடம் பெற்றவர் என்பதையும் அவருடைய அப்பழுக்கற்ற ஆட்டமே நிரூபித்தது.

சமீபத்தில் பம்பாய் அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் குமாரி கமல் கலா—பாக. இவர் ஆறு மாதத்தில் மூன்று அழகிப் போட்டிகளிலும் முதலாவதாக வந்து சாதனையை நிகழ்த்தி விட்டிருக்கிறார். கல்லூரி மாணவியான இவருக்குச் சினிமாவில் நடிக்க விருப்பமில்லை என்பது ஆச்சரியமான விஷயம்.

—சவன்

சாண் வீவிண்டருக்குப் பலியான பெண்களின் வரிசையில் புகழ் பெற்ற தெலுங்கு எழுத்தாளர் திருமதி மதி ரெட்டி சுலோசனாவும் சேர்கிறார். இவர் எழுபத்தைந்து நாவல்களுக்கு மேல் எழுதியவர். அவற்றில் நான்கு திரைப்படங்களாக வந்திருக்கின்றன.

—பாத்திமா ஷெய்க்

புகைப்பட தொகுப்பு

மகளிர் சமயக் கல்வி விழா

பிற்காலத்தில் மருமக் குறைந்து போகு நாம் மகளிர் சமயத்தில் பெண்களின் பங்கு சிறப்பாகத்தால் இருந்திருக்கிறது. சமய மற்றும் எந்த விசேஷங்களும் பெண்கள் இல்லாமல் நடத்த முடியாது என்ற நிலை காண் இன்றும் இருக்கிறது. பெண்களின் இந்த உயர்வை நினைத்தே செல்லையில் மார்ச் 30ந் தேதி முதல் [illegible] தேதி வரை) நடத்து கொண்டிருக்கும் மகளிர் சமயக் கல்வி விழாவிலும் ஒரு நாளை மகளிருக்கெனவே ஒதுக்கியிருக்கிறார் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். பெண்களையே இத்தனைக்குப் பொறுப்பேற்கச் செய்து அருளாசி வழங்கி யுள்ளார் ஸ்ரீ பெரியவர்.

சபையத்தில் அடையாறு பஞ்சாப் அண்ட் சித்து பாங்க் பிற்பட்ட வகுப்பினருக்குக் கடனுதவி அளித்தது. இவ்விழாவுக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வருகை தந்து கடனுதவிகளை வழங்கி அருளினார்.

சேலம் ஸ்ரீ வாசவி மகளிர் சமாஜம் சபையத்தில் கலைக் கண்காட்சி நடத்தியது. பிறந்த சமூக சேவை நிறுவனமாக, பெண்களின் வாழ்வைப் பயனுள்ள வகையில் மேன்மேற உதவும் சங்கமாக விளங்கும் இச்சமூகத்தின் சிறப்புக் கருதியே பல தொழிலதிபர்களும் பல வகையிலும் உதவி வருகின்றனராம்.



புகழ்பெற்ற பருதா நிறுவனம் 'ஆரி' சுத்தி பாட் என்ற வகை நிலாரணிகளைச் சமீபத்தில் அறிமுகப்படுத்தியது. நகை வகை, பல வகைகளுக்கும் நிலாரணிகளாக விளங்கு மாம்.

மனிதர்களா இவர்கள்?

சென்னை பல்லாக்கத்தில் பெண்கள் முதியோர் இல்லமாக நடத்தப்படும் விசாரத்தில் அந்தப் பெண்மணியைச் சந்தித்தபோது சொன்னேன், "உங்க கதையை வெளியிடுவதன் நோக்கமே இதைப் படிச்சிட்டு இந்த மாதிரி மனிதர்கள் இருக்க வேண்டாம் என்பதுதான்."

அந்த மனதான பெண்மணி அமைதியாகச் சிரித்தார். "இவர்களா இருக்குமா என்று கேட்டார். வாழ்க்கையின் விரக்தியின் எல்லைக்கே இந்த முதியோர்களைத் தாக்கி விருக்கிறது நாடு முழுவதும். இவர்களைப் போன்றவர்களை 'அம்மா' என்று அன்புடன் அழைக்கப்படுவதாக இருக்கிறார் (அவர்களின், வயதில் குறைந்த) இந்த இல்லத் தலைவி திருமதி எஸ்தர் மைதிலி.

மனுஷத்தனம் — மானுடம்! — அடடா, அதுதான் எத்தனை அற்புத மான சொல்! தயை, கருணை, இரக்கம், அன்பு, காதல் ஓ... எத்தனை குணங்கள் அதற்குள்ளே... ஆனால் இதெல்லாம் இந்த வார்த்தையில்தான் இருக்கிறதா? மனிதர்களிடம் அறவே இல்லையா? இத்தனை நன்றி கெட்டவர்களா இவர்கள்? ஆண்டவனே, மனிதர்கள் இத்தனை தாழ்ந்து விட்டார்களா? இப்படியெல்லாம் மனம் குமுறுகிறது இவர்களைப் பார்க்கும்போது... இந்த இரண்டு கதைகளைக் கேளுங்கள்...

ரண்டாவது பெரிய குடும்பம். நாலு ஆண் பிள்ளைகள் பிறந்து, அடுத்தாவது பெண் ணுக்கு நான் பிறந்தேன். சொல்லிக் கொள்ளும் வசதிக்குக் குறைச்சலே இல்லை. எல்லோரும் வக்கீலாகவும், ஜட்ஜாகவும், டெக்டராகவும் இருக்கிறவர. ஒரு வேலைக்கு அம்பது இரு நிமும். எல்லாம் கூட்டுக் குடும்பமாகத் தான் இருந்தது.

ஒரே பொண்ணுன்னு எனக்கு ஒன்பது வயசு ஆனபோதே நாதகம் பார்க்க ஆரம்பிச்சா. எங்களது சொல்ப செல்வாக்கான பேபெரின் கறதால நானுமே நிறையப் பேர் பொண்ணு கேட்டா. கடைசியில இன்ஜினியர் மாப் பிள்ளை செலக்ட் பண்ணி, அந்தக் காலத்தில அம்பத்திரண்டாயிரம் செலவு பண்ணிக் கல்யாணம் பண்ணி வச்சா. கல்யாணச் செலவு மட்டும் இது. எனக்கு அள்ளிப்பட்டி, தொடு, அட்டிகை, வெள்ளி அப்படின்னு அது வேற.

அப்போ நான் லயக்கு வரல. முறை வருவதற் அள்ளு வீட்டில இருந்தேன். அவா கிட்ட இருந்து எந்தத் தகவலும் இல்லியே,

பொண்ணு மாதியார்கிட்ட எச்சக்கிட்ட மும்மு எண்ணிக் கூப்பிடறது அன்னு நினை பிறார்.

அன்றைக்குத்தான் என் மச்சினருக்குக் கல் யாணமாகி முகப் பிரவேசம் ஆயிண் டிருக்கு! ஏண்டியம்மா, மூத்த நாட்டுப்பெண் வரலியா, அவதானே இந்த வீட்டுக்குச் சொந்தக்காரி'ன்னு எல்லோரும் கேட் டிருக்கா.

என் மாமியார், 'அவளா, அவ எங் கேயோ மலையான நாட்டிலே சாகக் கிடக் கிறு. அவளாவது வர்றதாவது' சொல் லிண்டே இருக்கிறப்ப நானும், அண்ணனும் போய் இறங்கினோம். எல்லோரும் மாமி பாரைப் பிழுபிழுன்னு அரிச்சிருக்கா. அப் போதைக்குச் சும்மா இருந்துவிட்டாள் என் மாமியார். அப்புறம் மூணே மாதத்தில் திருப்பி அனுப்பிவிட்டாள்.

திருப்பியும் அன்னு என்னைக் கொண்டு விட்டார். ஒவ்வொரு முறையும் சீர் செனத்தி தான். இத்தனை செய்து கொண்டு வரும் அவளிடம் முகம் கொடுத்துக் கூடப் பேச மாட்டார்கள். நமஸ்காரம் செய்துவிட்டுப்

-மஞ்சுளா ரமேஷ்

போய்ட்டு வரேன்னு சொன்னாப் பதிலே வராது. எத்தனையோ பெரிய உத்தியோகத்தில் இருந்த அண்ணா எனக்காக மெனனமாகப் போவான்.

ஒன்பதாவது வயது வரை ராஜகுமாரி போல இருந்த நான் திருமணமானது முதல் அவர்கள் வீட்டுச் சமையற்காரி, வேலைக்காரி ஆவேன். அப்போ பத்து வயதுகூட ரொம்பலை. நான் பூரா வேலை இருக்கும். மாமனாருக்கு மினரு தட்டிப் போட்டுச் சமையல். மற்றவர்களுக்கு அரைத்து விட்டுச் சமையல். ஒரு நாத்தனார் வீட்டு ஒருத்தி பிரசவத்துக்கு வருவார். மூணு வருஷம் தங்கியிருப்பாள். கூடம் பூரா மனிதர்கள்தான்.

ஒரு நாள் மாமியாருக்குப் பயந்துகொண்டு ஒரு மணிக்கு எழுந்து சமையல் செய்திருக்கிறேன். (பத்து வயசுக் குழந்தை!) அந்தப் பக்கம் வந்த நாத்தனார் என்னைப் பார்த்து விட்டு வீட்டில் எல்லோரையும் எழுப்பிச் சொல்லி விட்டாள். எல்லாருமாச் சேர்ந்து கைகொட்டிச் சிரித்தார்கள். எனக்கு ஒண்ணும் புரியலை....''

என்று அந்த அம்மாள் சொன்னபோது எனக்குக் கண்ணில் நீர் படர்ந்தது. ஆனால் பெரிய வசதியான குடும்பத்தில் பிறந்த கௌரவமும், குழந்தைத்தனமும், பெருந்தன்மையும் அந்த முகத்தில் படர்ந்தது.

''மாசா மாசம் நாத்தனார்கள் வந்து ஆயிரக் கணக்கில் வாங்கிண்டு போவா. ஆனால் மாமனார் சம்பாரிச்சுக் கொடுத்தார்.' என்று பெருந்தன்மையுடன் சொன்ன போது இந்தப் பெரிய மனதிற்கா இல்லாவு கஷ்டம் என்று தொண்டையை அடைத்தது.

''தினமும் காலையில் குளத்துக்குப் போய் குளித்து, வகை வகையாய்ச் சமைத்து எல்லோருக்கும் போட்டு நான் சாப்பிடறப்போ எனக்கு ரச வண்டலும், ஒரு பிடி சோறும் தான் மிஞ்சும். பதினோரு வயசுலயே உலகம் வெறுத்துப் போச்சு எனக்கு. குடும்ப வாழ்க்கைன்னா என்னன்னு தெரியலை. எதுவும் அனுபவிக்கலை. வேலையே செஞ்சு உருகிப் போன என்னப் பார்த்து அண்ணா மாமியார் கிட்டக் கெஞ்சினான். 'உங்க பொண்ணாட்டம் பாத்துக்கங்கோ'ன்னு. மாமியார் வாயே திறக்க மாட்டாள்.

வயசுக்கு வந்தப்புறம் கூட எனக்கு ஒண்ணும் நடக்கலை. என்ன நடக்கும்கிறதும் எனக்குச் சொல்லித் தாலை. சமையல் கட்டு தான் எனக்கு விதிச்சிருந்தது.

ஒரு நா என் நாத்தனார் எங்கிட்ட அன்பொழுகச் சொன்னா, 'உங்கண்ணாவுக்கு எழுது. இங்க என் ஆம்படையாளோட பேசக்கூட விடமாட்டேங்கறான்னு. என்ன வந்து கூட்டிண்டு போன்னு கடுதாசி போடு'ன்னா. அவளே எழுதி நான் கையெழுத்துப் போட்டேன். அண்ணா வந்து என்னைக் கூட்டிண்டு போனான். அப்புறம்தான் தெரிஞ்சது, அது அவர் ரெண்டாங் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காகச் செஞ்ச ஏற்பாடுன்னு.

இப்படிப் பண்ணலாமான்னு மாமனார் கிட்ட அண்ணா கேட்டால். 'பொண்ணு கறுப்பு. அழகாவே இல்ல. எனக்கு வேண்டாங்கறான். நானென்ன செய்ய?'ன்னு கைவிரிச்சுட்டார். அதோட என் புருந்தவிட்டு வாழ்க்கை முடிஞ்சது.

அப்புறமா விடு விடா இருந்தேன். ஒவ்வொருத்தர் வீட்லயும் வீட்டு வேலை செஞ்சுண்டு உபகாரமா இருந்துட்டுக் கடைசியா இங்க வந்துட்டேன்.....''

என்று பெருந்தன்மையாக முடித்துவிட்டார் அந்தப் பெண்மணி.

இவரைப் பற்றிச் சொல்லும்போது, இல்லத் தலைவி சாவித்திரி வைத்தி குறிப்பிட்டார் ''முதலில் இவரைச் சேர்த்துக்கொள்ள முடியாதுன்னுதான் சொன்னேன். ஏன்னா சொந்தக்காரா லிஸ்டைப் பார்த்தா பெரிய மனிதர்கள், பிரபலமான மனிதர்கள். ஆனா திரும்பத் திரும்ப இவர் என்னைக் கேட்டுக் கொண்டதால் இவங்க இருக்கிற இடத்துக்கே போனேன். இத்தனை பேர் இருந்தும் யாருமே இவரை வைச்சுக்கத் தயாரா இல்ல. ஏன்னா கண்ணு பார்வை மங்கிப் போச்சு. உடம்புல தெம்பு இருந்தவரைக்கும் உழைச்சு உழைச்சுத் தேய்ஞ்சு போயிருக்கா. இனிமே பாரம்தானே? எல்லாருமே சீசீன்னவுடனேதான் நான் இவங்களைச் சேர்த்துக் கிட்டேன்.''

எப்பேர்ப்பட்ட மனம்? என்ன வாழ்க்கை! கணவர் வசதியாக — இப்போதும் வசதியாக வாழ்ந்து வருகிறார். ஆனால் இவரா மனிதர்? பதினோரு வயதில் ஒரு சிறுமியின் மனதைக் கொலை செய்து வாழ்க்கையில் நடைப்பிணமாக்கி விட்டார்களே. ஏன் இவர்களெல்லாம் வீட்டுக்கு வந்தவளும் தன்னைப் போல மனம் என்ற ஒன்றுள்ள உயிர், பெண் என்று நினைக்க மாட்டார்களோ?

''எங்கப்பா ஒரு வக்கீல். மூத்த பெண் நான். ஹைகோர்ட் ஜட்ஜ் இந்தப் பையனைத் தான் சுவிகாரமா எடுத்துக்கப் போறார்னு நம்ப வச்சு எங்கப்பாவைச் சம்மதிக்க வச்சு கல்யாணம் பண்ணிண்டா. எனக்குப் பதினாலு. இவருக்கு இருபத்தி நாலு.

அனைத்தும் படிப்பும் ஏறல. வேலை செய்யவும் வலுக்கல. அவருக்கு ஒரே பொழுது போக்கு எல்லை அடிக்கிறதுதான். அம்மா எனக்கு ஆடி தானலெப்பன்னு பொறந்த வீட்டுக்கு வந்துட்டேன். நான் முத்த லட்சுமி நடத்தற தோரணத்தும் போலீட பேன்னு சொல்லிச் சேரவும் சேர்த்துட்டேன். ஆறு எனக்கப்புறம் தங்கை, தம்பிகளைச் என்னை சம்பாளம் ஆனதுன்று அம்மா எல்லோர் கட்டின்று போய், திரும்பவும் என் கலவர் பிட்டேயே விட்டுட்டாங்க.

அந்த நாட்டு காலை விழுந்து ஒரு சென்னை இல்லப்பெட்டி வேலை இருக்கு வாக்கிக் குடுத்தேன். சம்பளம் போதவட்டன். மூப்பது ரூபா சம்பளம். கவிலைய குழந்தைகள்.

முதல்ல பொறந்த பொண்ணையும், பின்னையும் மாறியாரும், நாத்தனரும் எத்தனை போலீட்டன.''

'என்ன எழுத்துன்று போலீட்டீங்க!... அதெப்படி பெற்ற குழந்தையைக் கொடுத்தீங்க? உலகத்திலேயே பெரிய இரக மன்னன் அது!' என்ற குறுக்கிட்டேன் நான்.

அவர் விரக்தியாகச் சிரித்தார். ''இரக மானது, துன்னாவது! அவர எழுத்துன்று போலீட்டா. நான் முடியாதுன்னு சொன்ன கொன்னதான் விடும். என்னையும் அந்த அந்தக் குழந்தைகளையும் குறுமா கொடு யம்பப்படுத்துனாங்க. கடைல என் கொன்னவோ சொல்லிக் கொடுத்த அவங்க ரெண்டு பேருக்கும் தானாள்ள ஒருத்தி இருக்காங்கறதே மறந்து போச்சு.

அப்புறம் எனக்கு ஒரு பிள்ள, மூணு பொண்ணு. பின்ன தங்கெடுத்துச் சம் பாதிக்க ஆரம்பிச்சப்புறம், இதுதான் எல்லாம் வேண்டாம் விட்டுட்டார். 'நானொன்று இனிச் சம்பாதிக்கறும், என் பின்ன எனக்குச் சொந்த போலீனன்'னு பேசுவார். அதோட இருந்தாப் பரவாயில்ல. ஒரு பொண்ணு ரிலீஜிதும் புதுச ஆரம் பிச்சது. இதச் கேள்விப்பட்டு அவர மத்த எத்தும் போட்டாங்க. அவர் கெக்கல.

என்னையும் மூணு பொண்ணையும் வைதராபாத்துக்குக் கூட்டிட்டுப் போலீட் டார். அப்படி மூப்பது வருசம். அவர கொண்டு வர்ற கொறச்ச சம்பளத்துல பாடுபட்டுப் பொண்ணப் படிக்க வச்ச ஒவ்வொருத்தரையாக் கரை சேர்த்தோம். அவங்கப் பண்ணிக்கொடுன்று மாட்டேன் னுட்டா, அப்பாவுக்குப் பொண்ணு ரிலீஜிதும் இவனுக்குக் குடி ரிலீஜிதமாச்சு.



நான் முட்டி மோதி அழுதேன். அவர் கேக்கல. ஒரு நா என்ன அம்மாவழு விட்டுட்டு ஓடிட்டான். கடைல பொண்ணு என்ன வச்சிண்டா – வெங்கட்சீவா–வெங்கட் னும் போற புருஷன் பெண்டாட்டிக்குச் சமைத்து, வீட்டவனுக்கு டிரஸ் பண்ணி, குழந்தையப் பாத்துண்டு, வீட்டு வேல செஞ்சன்று... கொஞ்சம் சமயம் சமயல் சரியில் லேன்னு, ஒரு சமயல் ரெடி பொட்டுப்போச் சன்னு அர்த்தமாதான். வீட்ட விழுமாதிரி சத்தமா. அவங்க பிரிஜெண்டின் வீட்டுப் பிரண்டுக்கு நான் வேலிய வரக்கூடாது. வந்தா இருக்கிற என்ன அம்மாவழு கொன் னிடுவேனாம். பத்த வாட் விட்டுக்கும் போகவும் விடாம என்ன வதைச்சா. அப்பப்ப போதுத்தப்ப பெரிய பெண்கள் ரெண்டும் பேசிக்கிறதுண்டு.

''என்னதான் அம்மாவுமும் ஒருத்தி காக சாப்பாடு துணி மணி என்றாலு...?''

நான் இவ அப்பா பிட்ட வாங்கின அடி உதை, வைதராபாத்துக்கு வந்து பட்ட கஷ்டங்கள், இவர்களைப் படிக்க வச்ச ஆளாக் கின, சம்பளம் பண்ணிக் கொடுத்தது இதற்கெல்லாம் வைக்கும் பார்க்கில. ஆற நான் பெற்ற குழந்தைகள்?

வாழ்க்கை புரக் கஷ்டப்பட்டேன். கடைசி காலத்தில் எனக்கு வேண்டியது நிம்மதி. அது எனக்குக் கொஞ்சம் கட இன்னி. எப்படியோ அந்தச் சேறுலேயே இருந்து தப்பிச்ச இன்ன வந்திட்டேன். இப்போ கொஞ்ச நிம்மதியா இருக்கேன்.

இந்த ரண்டு பேரையும் கடைசியாக ஒரு கேள்வி கேட்டேன். ''உங்களுக்கு வரி யாக இந்தில் கொந்தக்காரங்க இருந்தும் இப்படி ஒரு இல்லத்தில் அனாதை மாதிரி இருக்கோமேன்னு வருத்தப்பட்டதுண்டா?''

ரெண்டு பேரும் தலித் தலியாத்தான் கொண்டார்கள். ஆனால் ஒரே வார்த்தையைச் கொண்டார்கள். ''எங்களுக்கு வாழ்க்கை அவ்வளவு சுத்து போச்சு. நொம்பச் சிரமப் பட்டுட்டோம். எந்த ஆசையும் இல்ல. இப்ப நிம்மதியா இருக்கோம். இதுபோதும்''

வாழ்க்கை சுத்து போச்சு! என்ன வார்த்தை. இதுதான் இந்தில் பாடு! காலம் நிதமே நிதமாத மாறும் சக்கரம். நாம் வாழ்ப்போது மிகச் சில ஆண்டுகள். அதில் வாழ்வில் அன்பை, கருணையை, தெய் விகத்தைக் கண்டாலென்ன?

டெபாசிட்தாரர்களுக்கு
V.I.P. BRIEF CASE
அன்பளிப்பு

நம்பிக்கையின்
ஒளி விளக்கு
'பாலாஜி'

22%

டெபாசிட்தாரர்களுக்கு வழங்கும் கூடுதல் வட்டி

பாலாஜி மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

(Hire Purchase Financiers for Motor Vehicles)

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

5 வருடங்கள்	3 வருடங்கள்	2 வருடங்கள்	1 வருடம்
22%	19%	18%	17%

6 மாதங்கள் வரை - 16% 3 மாதங்கள் வரை - 15%

உங்கள் டெபாசிட்டுகளை அனுப்பும் முகவரி

பாலாஜி மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

(Hire Purchase Financiers for Motor Vehicles)

91, உஸ்மான் ரோடு, (சிவா விஷ்ணு கோயில் அருகில்)
தி. நகர், சென்னை-600 017. போன் : 447186

பெங்களூர்	: 24/1-A, மார்கோஸா ரோடு (10வது மைல்) மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003 போன் : 366971
தஞ்சாவூர்	: எண். 2 & 3, முதல் மாடி, தி.மு. கழக ரோடு, தஞ்சாவூர், போன் : 1526
திருவண்ணாமலை	: 14/A, ஆரணி-கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601 போன் : 483
பட்டுக்கோட்டை	: 8-A, தபோரி தெரு, பட்டுக்கோட்டை. போன் : 453

CHARI

சிறுப்புச் சமையல் போட்டி

பாத்திரங்களைப் பரிசளிப்பவர்கள்

Corn Industries And General Enterprises Limited,
Head Office Premises At no A-83,
10th Avenue, Ashok Nagar, (Near Ashok Pillar)
Madras-600 083.



முதல் பரிசு: எவர்சில்வர் டிரம்

அன்பார்ந்த வாசகிகளுக்கு சமையல் போட்டியில் பரிசு பெறும் குறிப்புக்களில் சில ஏற்கனவே வெளிவந்தவை என வாசகிகள் எழுதுகிறார்கள். கூபனில் இருக்கும் விதிமுறைகளுக்கு மாறாக அப்படி எழுதுவது தவறு. மங்கையர் மலர் வாசகிகளை யாரும் ஏமாற்ற முடியாது. இனி இதுபோல மற்ற புத்தகங்களில் இருந்து எடுக்கப்பட்டது என நிரூபிக்கப் பட்டால் அறிவிக்கப் பட்ட பரிசைத்தருவதுபற்றி யோசிக்க வேண்டிவரும்.

முத்து உருண்டைகள்

தேவையான பொருட்கள்:

பட்லர் ரவா ஒரு கிண்ணம்
சாப்பிடுவதற்குகந்த கோந்து 50 கிராம்
வெல்லம் அல்லது சர்க்கரை 3 கிண்ணம்
பாதாம் பருப்பு 10 கிராம்
பிஸ்தா பருப்பு 10 கிராம்
ஏலக்காய் 3 கிராம்
நெய் அரைக் கிண்ணம்
டால்டா 2 டேபிள் ஸ்பூன்
அலங்கரிக்க முத்துக்கள்

செய்முறை:

பட்லர் ரவையை வெறும் வாணலியில் வேசாகப் பச்சை வாசனை போகும்வரை மணக்க வறுக்கவும். கீழே இறக்கி ஆற வைக்கவும். ஒரு டேபிள் ஸ்பூன் டால்டாவில் கோந்து தூளை வறுத்து தனியாக வைக்கவும். பாதாம், பிஸ்தா, பருப்புக்களை மெல்லியதாகச் சீவிக்கொண்டு அவைகளையும் வேசாக ஒரு டேபிள் ஸ்பூன் டால்டாவில் வறுத்து வைத்துக் கொள்ளவும். நெய்யை உருக்கி வைத்துக் கொள்ளவும்.

கல்லூரலை நன்றாகத் துடைத்துவிட்டு ரவையை அதில் போட்டுக் கொஞ்சம் இடித்த பிறகு சர்க்கரை அல்லது வெல்லப் பொடியைச் சேர்க்கவும். நன்றாக இரண்டும் கலக்கப்பட்டவுடன் பொரித்த கோந்து தூள்களையும் சேர்த்து இடிக்கவும். எல்லாம் கலந்து வரும்போது பருப்புக்கள், ஏலக்காயையும் சேர்த்துக் கொஞ்சம் இடித்துவிட்டு பூராவையும் ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு நெய்யைச் சேர்த்து நன்றாக கலந்த பிறகு உருண்டையாக உருட்டவும். உருண்டை பண்ணுவதற்கு நன்றாக அழுக்கி செய்தால் எத்தனை நாளானாலும் கெடவும் கெடாது. உதிரவும் உதிராது. இந்த உருண்டை பெண்களுக்கு இடுப்பில் பலத்தை கொடுக்கும். பட்லர் ரவையில் செய்வதால் எளிதில் ஜீரணமாகும்.

இந்த உருண்டைகளை அலங்கரித்துப் பரிமாற வேண்டும் என்றால் சாப்பிடுவதற்குகந்த முத்துக்கள் கடையில் கிடைக்கின்றன. அவைகளை லட்டுக்களின் மேல் பொதித்தால் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

—சரஸ்வதி ராமமூர்த்தி,
பெசண்ட்நகர், சென்னை-90

'சேமியா' — பரிசு பெற்ற குறிப்புகள் அடுத்த இதழில்.

இடமிருந்து: எலுமிச்சை தக்காளி

பட்டர்ஸ் ஸ்பெஷல் கேக்

தேவையான பொருட்கள்:

பட்டர் ரஸ்க் அரை பிளேக்
தக்காளி 4
வெங்காயம் 4
பூண்டு 4 பல்
பச்சை மிளகாய் 4-5
உப்பு, மஞ்சள், இரண்டு சிட்டிகை
இஞ்சி ஒரு சிறு துண்டு
கறிவேப்பிலை 7-8
கொத்தமல்லி ஒரு சிறு கட்டு
சீஸ்ஸ்ட் எண்ணெய் 200 மிலி
சர்க்கரை 2 டீஸ்பூன்
கரம் மசாலாப் பொடி ஒரு டீஸ்பூன்
பேக்கிங் பவுடர் ஒரு டீஸ்பூன்
எலுமிச்சை சோடா அரை டீஸ்பூன்
தண்ணீர் 5 கப்
முந்திரி, வால்நட் போன்றவை சேர்ப்பதானால் எல்லாமாக 3 மேஜைக் கரண்டி

செய்முறை:

கேக் டின்னில் நெய் தடவி மாவு தூவி தயாராக வைக்கவும். ஓவனை 180 டிகிரி சூடில் தயாராக சூடேற்றவும். ரஸ்கை வெந்நீரில் நனைத்து, தக்காளி, வெங்காயம், உப்பு, மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை, பூண்டு இவற்றைச் சேர்த்து நன்றாக அரைக்கவும். ஒரு பாத்திரத்தில் ரஸ்க், சர்க்கரை, கரம் மசாலா, எண்ணெய், இவற்றை எடுத்து அரைத்த விழுதையும் முந்திரி முதலியவற்றையும் போட்டுக் கலக்கவும். மேலில் பேக்கிங் பவுடர், சோடாவைக் கரைத்து விட்டு கொத்தமல்லியைப் பொடிப் பொடியாக நறுக்கிப் போட்டு, மெல்லமாகக் கலந்து, தயாராக உள்ள டின்னில் ஊற்றவும். நன்றாகப் போன்றிதமாகி கம்பெனி முனை வீசியை ஒவனில் சுட்டெடுக்கவும்.

ஸ்வீஸ் பன்னீர் வெண்ணெய் தடவி ஒரு சாப்பிட மிக ருசியாக இருக்கும்.

மேலும் பரிமாறுவதற்கு ஏற்றது

பட்டர் ரஸ் வாழைப்பூ குழுக்கு

தேவையான பொருட்கள்:

பட்டர் ரஸ்க் அரை பிளேக்
வாழைப்பூ நறுக்கியது ஒரு கப்
சமையல் எண்ணெய் (அ) டால்டா அரை டீ.
துவரம் பருப்பு 100 கிராம்
கடலைப் பருப்பு 100 கிராம்
உளுத்தம் பருப்பு 25 கிராம்
இஞ்சி சிறு துண்டு.
பச்சை மிளகாய் 4
பெரிய வெங்காயம் 2
மிளகாய் வற்றல் 15
பெருங்காயம் சிறு துண்டு
கறிவேப்பிலை சிறிதளவு
தேவையான உப்பு

செய்முறை:

முதலில் பட்டர் ரஸ்கை வாணலியில் (எண்ணெய் விடாமல்) நன்கு வாசனை வரும் வரை வறுத்துக் கொள்ளவும். பிறகு கூறிய பருப்பு வகைகளை நன்றாகக் கழுவி ஒரு மணி நேரம் ஊறவைக்கவும். வாழைப்பூவை வாணலியில் போட்டு 2 டீஸ்பூன் எண்ணெயோ, டால்டாவோ விட்டு 5 நிமிடம் வதக்கி எடுத்துக் கொள்ளவும். இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம், கருவேப்பிலை, இவற்றைப் பொடிப்பொடியாக நறுக்கிக்கொள்ளவும்.

பின்னர் ஊறிய பருப்புக்களை ஆட்டுரலில் போட்டு, அவற்றோடு மிளகாய் வற்றல், உப்பு, பெருங்காயம் இவற்றைச் சேர்த்து சிறிது மிதமாக அரைத்துப் பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும். அரைத்த விழு

துடன் பட்லர் ரவா, வதக்கிய வாழைப்பூ, நறுக்கிய இஞ்சி, பச்சை மிளகாய், கருவேப்பிலை, வெங்காயம் இவற்றையும் நன்றாகச் சேர்த்துக் கலக்கவும். (கெட்டியானால் சிறிது தண்ணீர் விட்டுக் கொள்ளலாம்) பிறகு அடுப்பில் வாணலியை வைத்து அதில் எண்ணெயோடாவோ விடவேண்டும். எண்ணெய் காய்ந்ததும் பட்லர் ரவா வாழைப்பூ கலவையை சிறு சிறு உருண்டைகளாகப் போடவும். இரு பக்கமும் நன்கு பொரிந்து சிவந்ததும் எடுத்து விடவும். இதுவே பட்லர் ரவா வாழைப்பூ நுனுக்கு. இது சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.

எஸ். இந்திரா,
ஆலங்குளம்,
ராஜபாளையம்



ஆறுதல் பரிசு: டிபன் கேரியர்

பட்லர் ரவா பாரிட்ஜ்

தேவையான பொருட்கள்:

பட்லர் ரவா 250 கிராம்
பயித்தம் பருப்பு 150 கிராம்
சம்பா கோதுமை ரவா 100 கிராம்
ஜவ்வரிசி 10 கிராம்
பார்லி அரிசி 50 கிராம்
ஏலப்பொடி 3 ஸ்பூன்

செய்முறை:

பட்லர் ரவாவை வாணலியில் போட்டு வறுக்கவும். பாக்கியுள்ள பயித்தம்பருப்பு, சம்பா கோதுமை ரவை, ஜவ்வரிசி, பார்லி அரிசி, இவற்றைத் தனித் தனியாக வறுத்து எடுக்கவும். பின்பு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து மிக்ஸியில் அல்லது மிஷினில் தைலாகப் பொடிக்கவும். அத்துடன் ஏலப் பொடியையும் கலந்து பாட்டிலில் கொட்டி மூடிவைக்கவும்.

அடுப்பில் ஒரு பாத்திரத்தில் ஒரு தம்ளர் தண்ணீர் விட்டுக் கொதித்தவுடன் அதில் கால் தம்ளர் பச்சைத் தண்ணீரில் ஒன்றரை ஸ்பூன் பொடி சேர்த்துக் கரைத்து கொதி நீரில் விடவும். கைவிடாமல் 3 நிமிடம் கலக்கவும். நன்கு பொங்கி வரும் உடனே அடுப்பைக் குறைத்து ஒரு நிமிடம் கழித்து இறக்கவும். பால், சர்க்கரை சேர்த்துக் குடிப்பதற்குச் சிறந்த பானமாகும்.

வளரும் குழந்தைகள், நோயாளிகள் விரதம் கடைப்பிடிப்பவர்கள் இந்தப் பானம் பருகலாம். சர்க்கரை வியாதிக்காரர்கள், சர்க்கரை சேர்க்காமல் உபயோகிக்கலாம். மிகவும் சத்துள்ள இந்தப் பானம் ப்ரிட்ஜில் வைத்துப் பருகினாலும் ருசியாக இருக்கும்.

பங்கஜம் பரமேஸ்வரன்
வேதூர்.

ஆறுதல் பரிசு: டிபன் கேரியர்

பட்லர் ரவை புளியோதரை

தேவையான பொருட்கள்:

பட்லர் ரவை அரை கிலோ
நல்லெண்ணெய் 100 கிராம்
மிளகாய் வற்றல் 15
கடலைப் பருப்பு ஒரு தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு ஒரு தேக்கரண்டி
கடுகு அரை தேக்கரண்டி
பெருங்காயம் சிறு துண்டு
தகுந்த அளவு உப்பு
பச்சை மிளகாய் 10
இஞ்சி ஒரு துண்டு
வறுத்த வேர்க்கடலை 50 கிராம்

செய்முறை:

பட்லர் ரவையைச் சாதம் போல் வேக வைத்து வடித்து ஒரு பேசனில் ஆறவைக்கவும். புளியை அரைக் கோப்பை தண்ணீரில் போட்டு நன்றாகப் பிசைந்து வைக்கவும். அடுப்பில் வாணலி போட்டு எண்ணெய் ஊற்றி, கடுகு, கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு, முழு வற்றல் மிளகாயும் தாளித்து அதில் பச்சை மிளகாய்த் துண்டுகள் போட்டு பிறகு பிசைந்து வைத்த புளிச் சாறு, உப்பு போட்டுக் கொஞ்சம், மஞ்சள் தூள், பெருங்காயம் போட்டு, நன்றாகத் தண்ணீர் வற்றும்படி கொதிக்க வைத்து, ஆறிய பிறகு இந்தப் புளிக் காய்ச்சலை பட்லர் ரவையில் போட்டு சுத்தம் செய்த வேர்க் கடலையும், கருவேப்பிலையும் போட்டு, வேசாகக் கலந்து விட்டால் புளியோதரை சாப்பிட ருசியாக இருக்கும்.

டி. அனுசூயா தேவி
சென்னை-49

சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (ஏஜென்ஸிஸ்) லிட்., சென்னை, கோயம்புத்தூர், மலைக்கா திருச்சிராப்பள்ளி, சேத்திராபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம், பெங்களூர், மங்களூர், சர்ணாகுளம் ஆகிய நகரங்களுக்கு விநியோகத்தர்கள்.

விட்டல்ஸ் பாலிகோர்ப் நிறைந்த பாலும் துணையாகி, உங்கள் குழந்தையின் வாழ்க்கை தொடங்கட்டும் நலமாக!

விட்டல்ஸ் பாலிகோர்ப்

உலகில் சிறந்ததற்கு இணை நம் கைவசம்!

ULKA-L-1-83 Tam

ஸ்தபதி

வினாவும் ஆறவகை; அவற்றில் "ஆருடி" வகை விவாதத்தில் (வேத விதிப்படி பாதா பிரக்கருடன் அக்னி சாக்ஷியாக நடத்தப்படுவது) மாங்கல்ய தாரணம் செய்வித்த பிறகு "ஸப்தபதி" என்று சொல்லப்படும் சம்பவம் முடிவு பெற்ற பின்னரே விவாதம் நிறைவுபெறுவதாக ஐதீகம்.

"ஸப்தபதி" என்பது மணப்பெண் வலது காலி அம்மியின் மேல் வைத்து மணமகன் இடது கையால் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு அடியாக மந்திரத்துடன் ஏழு அடி நடத்தி வைப்பதாகும். இதன் தத்துவம் யாதெனில்:

முதல் அடி – மழை முதலான சுப நிமித்த அனுகூலமாக இருப்பதற்காகவும், இரண்டாம் அடி – தானியங்களின் உற்பத்தி அதிகரித்து சம்பத்தும் நிலவுவதற்காகவும், மூன்றாம் அடி – பிரதாதிக் (சதுர்த்தி, சஷ்டி, தசமி, சோம வார, சனி வார முதலியன) அனர்த்தக் அபிவாரை ஏற்படவும், நான்காம் அடி – வியாதிகளின்றி ஆரோக்ய வாழ்வு அடைவதற்காகவும், ஐந்தாம் அடி – பல முதலியவைகள் நிரம்பப் பசு அபிவிருத்திக்காகவும், ஆறாம் அடி – ஆறு ருதுக்களின் அனுக்கிரஹம் பெறுவதற்காகவும், ஏழாம் அடி – சப்தரிஷிகளின் ஆசிகள் அடைவதற்காகவும்.

எட்டாம் அடி – கலை மிகுந்த நித்திய சுகமான பரலோகம் வாழ்வதற்குத் தடையின்றி அனுக்கிரஹிப்பதற்காகவும்.

ஸ்விட்ஸ் : சமையல், மங்களூர் போளி, கோல்டுபிஸ் கோதுமை அல்வா

சுவர் வாலைகள் : மை முறுக்கு, தட்டை, தேன்குழல், கோட முதலியவை

கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, இரண்டாவது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை-600 020 (போன் : 412557)

கிளை : காமதேனு சூப்பர் மார்க்கெட், அண்ணாசாலை, சென்னை-600 018

பெண்ணுக்கு நீதி வழங்கிய தீர்ப்பு!

'பொது இடங்களில் சேவை' என்பது ஒரு மகத்தான பணி. அதிலும் பஸ்கள், ஆட்டோ போன்றவற்றில் பொதுமக்களுக்கு நேரும் பயன்படுத்தும் துறைகள். இந்தச் சாதனங்களில் வேலை செய்பவர்கள் பொதுமக்களிடம் அன்பாக பண்பாக, முறையாக நடந்து கொள்ளக் கடமைப் பட்டவர்கள். அப்படிப்பட்டவர்கள் தினமும் இருக்கவும் செய்கிறார்கள். அத்தகைய டிரைவரையோ கண்டக்டரையோ அறிகாரியையோ பார்க்கும்போது சந்தோஷமாக இருக்கிறது. பஸ்பாக அந்தப் பயணமே சுகமாகவும் இருக்கிறது.

தலை பயிற்றுவிட்டு. புன்முறுவலுடன் முன்னே சந்தான செய்கிறது. சாப்பிட்டு நடந்து முடித்த ஒரு வழக்கு இதற்குச் சான்று. 1977ம் ஆண்டு ஜூன் மாதம் ஒரு நாள் சென்னை பஸ் ஒன்றில் பெண் டாக்டர் ஒருவர் பயணம் செய்திருக்கிறார். அந்தப் பெண் டாக்டர் வரவேண்டிய இடம் வந்தபோது கண்டக்டர் கூறினார்,

"உங்க கை மேலே இருந்து கொடுக்க. என் கையைத் தாண்டி வாங்கிக் கொள்ள மாட்டேன். உங்க கை விரல்களில் காசை வைத்துக் கொண்டு என் கை விரல்களில் தொட்டுக் கொடு" என்றார்.

இதில் ஏற்பட்ட சச்சரவில் மிகவும் ஆபாசமாக, கொல்லத் தகாத வார்த்தைகளால் அந்தப் பெண்ணைத் திட்டினார் கண்டக்டர். அந்தப் பெண் மருத்துவர் பஸ்வல் அதிகாரியிடம் புகார் செய்திருக்கிறார். பஸ்வல் அதிகாரிகள் விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் கண்டக்டரை வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள். அவர் அரசாங்கத்துக்கு அப்பீல் செய்து தொல்லையுற்று, உயர் நீதி மன்றத்துக்கு அப்பீல் செய்திருக்கிறார்.

இந்த வழக்கில் நீதி மன்றம் கொடுத்துள்ள தீர்ப்பு மிகச் சிறப்பானது. அவசர வேலையிலிருந்து நீக்கியது சரியே என்று தீர்ப்புக் கூறியதுடன், 'எதிர் காலத்தில் அனைவருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும்' என்றும் குறிப்பு உள்ளது.

நீதிபதி என். மோகன் இவ் வழக்கில் கண்டக்டரை மனுவை டிஸ்மிஸ் செய்ததுடன் "கத்த அநாகரீகமான முறையில் – காட்டு மிராண்டித் தனமாக இந்தக் கண்டக்டர் ஒரு பெண்ணிடம் நடந்து கொண்டிருக்கிறார். அத்தகைய ஒருவரைப் பதவியிலிருந்து விலக்க சட்ட திட்டங்கள் ஏதாவது ஒரு தடையாக

> உயர்நீதி மன்றத்தில் அளிக்கப் பட்டுள்ள தீர்ப்பு என்ற வகையில் இந்த வழக்கை ஒவ்வொரு பெண்ணும் அறிந்திருக்க வேண்டும்.

இருந்தாலுங்கூட அந்தச் சட்டதிட்டத்தைக் கசக்கிப் பிழிந்தாவது கொண்டு வேண்டும். தவிர சட்டத்தில் உள்ள ஓட்டைகளில் புகுந்து கொண்டு தப்பித்துக் கொள்ள விடக் கூடாது. பொதுமக்கள் பயன்படுத்தும் ஒரு போக்கு வரத்து அமைப்பில் தனது செயலும் மற்றவர்களுக்கும் இது ஒரு பாட மாக அமைய வேண்டும்" என்று கூறியுள்ளார்.

பெண்களின் பாதுகாப்பிற்கோர் காவலாக இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது. உயர்நீதி மன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பு என்ற வகையில் இந்த வழக்கை ஒவ்வொரு பெண்ணும் அறிந்திருக்க வேண்டும். எங்கெல்லாம் இது போன்ற அநீதிகள் பெண்களுக்கு இழைக்கப்படுகிறதோ அங்கெல்லாம் பெண்கள் வாதாடும்போது இதையே முன்னுதாரணமாக எடுத்துக் காட்டலாம்.

வளரும் குழந்தைகளுக்குத்
தேவை ஒரு விசேட திட உணவு ...
∴பாரெக்ஸ்

காரணம், குழந்தைகளின் விரைந்த முழுவளர்ச்சிக்கான அதிக ஊட்டச்சத்துள்ள திட உணவாகும் :பாரெக்ஸ்.

உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான புரதச்சத்து நிரம்பியதாகும் :பாரெக்ஸ். புரதச்சத்துப் பற்றாக்குறையிலிருந்து குழந்தையைப் பாதுகாப்பதற்கென்றே உலக உடல்நலக் கழகம் பரிந்துரை செய்யப்பட்ட திட உணவுகளில் அடங்கி இருக்கவேண்டிய புரதச்சத்தின் அளவு பற்றி சில தர நிர்ணயங்கள் விதித்துள்ளது. சிபாரிசு செய்துள்ள முறையைப் பின்பற்றி :பாரெக்ஸ் திட உணவைத் தயாரித்து அளித்தால் அது உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான புரதச்சத்து நிறைந்ததாகும்.

ஆரோக்கியமான இரத்தத்திற்கென கூடுதல் இரும்புச்சத்து
அடங்கியதாகும் :பாரெக்ஸ்.

"தாயிடமிருந்து ஏராளமான இரும்புச் சத்தைப் பெற்று குழந்தை பிறக்கிறது. பிறந்த பிறகு மெல்ல மெல்ல இரும்புச் சத்தின் அளவு குறைய தொடங்குகிறது. பால் நல்ல உணவாக இருப்பினும், இரும்புச்சத்துப் பற்றாக்குறையினால் அது முழுமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச்சத்து அடங்கிய திட உணவு தேவைப்படுகிறது."

—டாக்டர் பரஸ் டி. ஆர்யா

குழந்தையின் இரத்தத்திற்கும், தொற்று நோய் எதிர்க்கும் சக்திக்கும், அவசர பொது ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சி இவற்றுக்குத் தேவை இரும்புச்சத்து. அதனால்தான் :பாரெக்ஸில் வேறு எந்த பிராண்டு செய்யப்பட்ட திட உணவைக் காட்டிலும் அதிக இரும்புச்சத்து அடங்கியுள்ளது.

உங்கள் குழந்தையின் பற்களுக்கும் எலும்புகளுக்கும் அத்தியாவசியமான
கால்சியம் மற்றும் :பாஸ்:பரஸ்
சரியான விகிதத்தில்
அடங்கியுள்ளதாகும் :பாரெக்ஸ்.

உங்கள் குழந்தையின் பற்கள் மற்றும் எலும்புகளின் சீரான வளர்ச்சிக்குத் தேவை கால்சியம் மற்றும் :பாஸ்:பரஸ். ஆனால் 2:1 என்னும் விகிதத்தில் இவை ஒன்று சேர்ந்திருந்தால்தான் குழந்தைக்கு மிகச்சிறந்த பலனிக்கும். இந்த இரண்டு அத்தியாவசியமான உட்பொருள்களும் உணவுமான விகிதத்தில் அடங்கியதாகும் :பாரெக்ஸ். அது உங்கள குழந்தை மிக ஆரோக்கியமான எலும்புகளையும் மிக திடமான பற்களையும் பெறுவதை உறுதி செய்கிறது.

தவிர், :பாரெக்ஸ்
எளிதில் செரிக்கக்கூடியதாகும்.

குழந்தையின் மென்மையான செரிக்கும் சக்திக்கேற்றவாறு விசேடமாக முன் கூட்டியே பக்குவம் செய்யப்பட்டதாகும் :பாரெக்ஸ்.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது

:பாரெக்ஸ்®

வழங்குவோர் க்ளாக்ஸோ

"உங்கப்பா ஒடிப்போயிட்டாருன்னு" ஒரு வார்த்தையாகத் நிறைத் தேர்ச்சி சொல்லி முடித்தபோது விளக்கையில் நின்றது போலது ராமதாளின் உடம்பு. அவளாலே செய்து முகத்தில் மேகம் கப்பாக, கண்கள் கலங்கி விருந்தன.

பதினாறு வயசு மஞ்சு. அம்மாவைப் பார்த்தான் வெட்கப்பட தெரியாத மஞ்சு. புரிந்தும் புரியாமல் அப்பாவைப் பார்த்து விழித்தாள். ஆறுல் அப்பாவுக்கு இரு பெரிய இழப்பு என்பது மட்டும் புரிந்தது.

"போலாம்டா மஞ்சு!"

"எப்படிம்மா எப்படி? கண்டிட்டச் சொல்லக்கூடாத விஷயம்மா இது. பட். சொல்லித்தான் ஆகணும். நாளைக்கு அம்மா எங்கேன்னு நீ கேட்டா, நான் என்ன பதில் சொல்றது?"

"அது யார் டாடி?"

"சொல்றேன்."

"ரூபினி. உனக்கொரு தாயி நிலுல்" உற்சாகமாக மிஸ்ஸிஸ் தோளில் கட்டிலுள் ராமதாள்.

"என்ன?"

"எங்க ஆபீஸை இருக்கிற எல்லோருட்டயும் நாகேக்கு நம்ம விட்டுக்கு புன்னகுக்கு வரப் சொன்னார்."

"இதுல எனக்கென்ன சந்தோஷம்?"

"அவர் ஒரு கிரிகெட் விளையாட்டுக்காரர். டெண்டுல்கர் விளையாட அனுப்பி வந்திருக்கு. அதுக்காகத்தான் இந்த டின்னர்."

"வாவ்!" துள்ளினுள் ரூபினி.

மறுநாள் மாலைக்காகத் தயாரிக்கத் தொடங்கினாள். பார்த்துப் பார்த்து தனக்கு ஒவ்வொரு அயிட்டத்தையும் தயாரித்தாள். காரட அல்வா போதாதென்று தோன்ற குலாப்ஜாமுனுக்கு அவசரம் செய்தாள். பீச் மெல்பா செய்து முடிப்பதற்குள்— வெள்ளை உடையில் கண்ணுக்கு பெரு விருந்தாக வந்தான் மஞ்சுளா. முகத்துக்குப் பொருத்தமான சாயத்தை உதட்டுக்குத் தேர்ந்தெடுக்க நேரம் தேவை ரூபினி.

அழைப்பு மணியில் சங்கீதத்தில் பதறிப் போய் வாசலுக்கு ஓடினாள்.

"வெல்கம் டியர்ஸ்" வரவேற்றாள் ராமதாள். "மை டியர் ரூபினி... நாளை நல்ல கிரிகெட் ரசிகை" அறிமுகம் படுத்தினார்.

"அதுக்காகவா இந்த வெள்ளை உடை? ஐயே நீங்க அப்பாவுடன்..." வெள்ளிலாக சிரித்த போது கன்னத்தில் சின்னக் குழி விழுந்தது.

நேரம் இப்படிச் சிரித்துக் கொண்டே ஏத்து போட்டால் விக்கெட்டுகளைக் கவர மாக வீழ்த்தலாம் என்று தோன்றியது.

"கிரிகெட்டை எல்லா விதத்திலும் நீங்க ரசிப்பீங்களா?"

மீச மெல்லாலை மஞ்சுளா எடுத்தவன். மறுபடியும் சிரித்தான். "ப்ளண்ட் ரசிகர்.

நட் பாட்ஸ்மேன் ஆல்ரவுண்டர்... தான் கோல்டன் டக் அடித்தால் கூட சொல்லக் கூடாது. டெண்டுல்கர் மாட்ச் சொல்லட்டும். ரசிக்க தெரிந்தால் நல்லா இருக்கும். கிரவுண்டுல ஒரு சிக்ஸர் அடிச்சா மாதிரி..."

மெல்லச் சிரித்து போனாள்.

ரன் அவுட்

ரேவதி பாலா

நுட்பமாகக் கிரிக்கெட்டை அவள் விமரிசிக்க, சமையலையும் (அவளையும்) ரசித்துக்கொண்டே அவனும் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

எதிலும் கவந்து கொள்ளாமல் கைக்கும் வாய்க்கும் ஏத்தம் நடத்திக் கொண்டிருந்தார் ராமதாஸ்.

''என்ன ராம், நீங்க ஒண்ணுமே பேசல! ட்வெல்த் மேனு நீங்க!''

'களுக்'கென்று சிரித்த ரஜினி, ''அவருக்குக் கிரிக்கெட்டு என்னன்னே தெரியாது. 'எத்தனை கோல் போட்டாங்க'ன்னு கேப்பாரு.''

அவனும் அட்டகாசமாகச் சிரிக்க ராமஎதையும் சட்டை செய்யாமல் வரையில் இருந்த கொத்தமல்லியைத் தனியாகக் கிள்ளி ஸ்வாரஸ்யமாகக் கடித்துக் கொண்டிருந்தார்.

''நா வரலாமா?''

குரல் கேட்டு நிமிர்ந்த ரஜினி மலர்ந்தாள்.

''இதென்ன கேள்வி? ப்ளீஸ் கம் இன்'' ஓடிப்போய்க் குனிந்து தலையசைத்து வரவேற்றாள்.

''அவர் இல்லை?''

''ஐ'ம் ஸாரி. நான் அப்புறமா வர்றேன்.'' அவசரமாக எழுந்தாள்.

''ஏன் என்னை மனுஷியாத் தெரியலியா?'' பொய்க் கோபத்தோடு உருட்டி விழித்தாள்.

''அப்படிப் பார்க்காதீங்க. அப்புறமா நான் ஈ. பி. டபிள்யூ. ஆயிடுவேன்.''

''அப்படின்னா?''

''ஐ பிஃபோர் லிக்கெட்!''

''சீ! குறும்பு!'' மெல்லச் சிரித்தாள் அவள். ''என்ன சாப்பிடறீங்க?''

''ரசம். உங்கிட்டப் பிடிச்ச... ஐ'ம் ஸாரி...'' ஒருமையில் சட்டென அழைத்து நாக்கைக் கடித்துக் கொண்டான்.

''நோ ரிசர்வேஷன். தாராளமாக அப்படியே நீங்க கூப்பிடலாம். எனக்கும் அது தான் பிடிச்சிருக்கு.''

கிரிக்கெட் மட்டுமல்லாமல், எத்தனையோ விஷயங்களில் அவன் மேதை என்பது தெரிந்த போது மெல்ல மெல்லத் தன்னை அவனிடம் இழக்கத் தொடங்கினாள்.

அவன் வராத நாட்களில் துக்கம் அனுஷ்டித்தாள். அவன் விளையாடப் போன நாட்களில் லைட்னிங் கால் போட்டு பல முறை பேசினாள். தன் சொந்தப் பிரசினைகளைக் கூட மனம் விட்டுப் பேசினாள். இவனது கம்பிரமான ஆளுமையினால் ராமதாஸ் மெல்ல மெல்ல மனத்தில் மங்கிக் கொண்டு வருவது புரிந்தது. —

''ஏன் ரஜி டல்லா இருக்கே?''

''அது கொஞ்ச நாளா எனக்கே புரியலை விஜய். ஆனா வீட்ல இருக்கும்போது சந்தோஷமே இல்லை. அது மட்டும் நிச்சயமாத் தெரியுது. வாழ்க்கைல எத்தனையோ விஷயங்களை இழந்துட்டேன்னு உங்களைச் சந்திச்ச பின்னாலதான் புரியுது விஜய்!''

அவன் பேசாமல் இருந்தான். குழம்பிப் போன அவளது முகத்தில் இதயத்தைப் படிக்க முயற்சி செய்தான்.

''விஜய், எனக்குப் பதினாறு வயசில கம்யாணம் ஆச்சு. பெரிய விஜ. உடுத்துக்க துணி. பரப்ரம்மமான புருஷன் இதான் உலகம்னு நெனைச்சு நான் ஏமாந்துட்டேன்.

''நீங்க ஒரு கவிதை படிச்சிருக்கீங்களா விஜய்?''

''என்ன அது?''

''மனைவி'ன்னு தலைப்புப் போட்டு எழுதப்பட்ட கவிதை.

'வாழ்வெனும் கிரிக்கெட் பந்தயத்தில்
அடுக்களைக்கும் படுக்கை அறைக்கும்
ரன் எடுக்க ஓட்டமாய் ஓடி
ரணமாய்ப் போனவள்'னு'

பெரிதாகச் சிரித்தாள்.

''இனிமே என்னால ஓட முடியாது விஜய். நான் அவுட்டாகப் போறேன் விஜய்.''

புரிந்துகொண்ட பாணியில் மறுபடியும் சிரித்தான் விஜய். கன்னத்தில் இம்முறை விழுந்த குழியில் பதித்த கண்களை எடுக்கவில்லை ரஜினி.

மறுநாள் ராமதாஸை அனுப்பிவிட்டுக் கடிதம் எழுத உட்கார்ந்தாள் ரஜினி.

'கசப்போடு வாழ இனிமேல் இஷ்டமில்லை. சொல்லாமல் ஓடிப்போக விரும்பவில்லை. விருப்பமான வாழ்வை அமைத்துக் கொள்ள விஜய்யோடு போகிறேன். —ரஜனி''

அந்தக் கடிதத்தைப் படித்தபோது ஓரளவு மஞ்சுவுக்கு எல்லாமே புரிந்தது.

''கசப்புன்னு எழுதியிருக்காங்களே மம்மி அது எனக்குப் புரியலை டாடி. நீங்க மம்மியை என்னிக்காவதுபுண்படுத்தியதுண்டா''

''இல்லைம்மா. எனக்கும் அதுதான் புரியலை. அவளை ராணி மாதிரி வச்சு தாங்கினேன். ஆனா ஒண்ணு. உதட்டுல தேனைத் தடவிட்டு இலக்கியம் பேச எனக்குத் தெரியாது. கன்னத்துல குழி விழ அழகாச் சிரிக்கத் தெரியாது. கண்ணம்மா, நா ஒரு நல்ல கணவனா இருந்தது சத்தியம். ஆனா ரசனையுள்ள ஒருத்தனைத் தேடியிருந்தா உங்கம்மா தோத்திருக்கவாம்.'' ராமின் குரல் கொஞ்சம் கொஞ்சமாக உடைந்து நொறுங்க உடல் குலுங்க அந்த ஆண்மகன் அழுவதை முதன் முதலாகப் பார்த்தாள் மஞ்சு.

முகம் தெரியாத அந்த மனிதன் மேல் கோபம் வந்தது.

தர்பூசணி கீர்

தேவையான பொருட்கள்:

தர்பூசணி பழம் 50 பைசா
சர்க்கரை 6 ஸ்பூன்
விருப்பமானால் பால் சேர்க்கலாம்.

செய்முறை:

தர்பூசணிப் பழத்தை தோல் நீக்கி சிறு சிறு துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவும். மிக்ஸியில் போட்டு, சிறிது சர்க்கரை சேர்த்து அரைக்கவும். அந்த ஜூஸை எடுத்து தேவைக்கேற்ப சர்க்கரை, வேண்டுமானால் பால் சேர்த்து ஃபிரிஜ்ஜில் வைத்துச் சாப்பிட்டால் இந்தக் கடும் வெய்யிலுக்கு மிகவும் குளிர்ச்சியாகவும், இதமாகவும் இருக்கும். இந்த வெய்யிலுக்கு இப்பழ ஜூஸ் உடலுக்கு மிகவும் குளிர்ச்சியைக் கொடுக்கிறது. குட்டைத் தணிக்கிறது. அதிகமாக செலவும் ஆவதில்லை.

ஜனனி முரளி

''டாடி, அவங்க எங்க போயிருக்காங்கனு உங்களுக்குத் தெரியுமா?''

''இந்த ஊர்லதான் இருக்காங்க இடத்தைச் சொன்னார்.

''ஒரு புதுஸ்நேகிதியை உனக்கு அறிமுகப்படுத்தப்போறேன் ரஜினி!'' புதிரோடு வாசல் பக்கம் கையைக் காட்டினான் விஜய்.

அந்தப் பெண் நுழைந்தபோது காதுக் கடியில் பூமி இடம் மாறியது. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

''இது யாருன்னு சொன்னீங்க?''

''என்னோட புதிய ஸ்நேகிதி.''

மெல்ல மஞ்சுவை நெருங்கிய ரஜினி, பளீரென அறைந்தாள் மஞ்சுவின் கன்னத்தில்.

அதிர்ந்தான் விஜய்.

''எத்தனை நாளா இந்த ஸ்நேகிதம்?''

''அதை அவசியம் நீங்க தெரிஞ்சுக்கணுமா'' அவட்சியமாக மஞ்சு ஒரு கேள்வியை விசினான்.

''தெரிஞ்சுக்கணும்மா!''

''எதுக்கு?''

''எதுக்கா? எதுக்குன்னு கேள்வி கேக்கற. நா....நா.... ஒன்னோட.....'' தடுமாறினான் ரஜினி.

''சுமான். ஏன் நிறுத்திட்ட சொல்லு!''

''அதைச் சொல்ல அவங்களால முடியாது. ஏன்னா அவங்க என்னோட எக்ஸ் அம்மா!''

''எக்ஸ் அம்மாவா?''

''என்னப் பெத்ததினால அம்மா. பட் நாட் நௌ.''

''ரஜினி, உனக்கு இல்லவை பெரியசைஸ்ல ஒரு பெண்ணு இருக்கிறதா எனக்குச் சொல்லவே இல்லையே நீ?''

''எதுக்குச் சொல்லணும்? நீங்க ப்ளேயர்னு தான் எனக்குச் சொன்னீங்க. ப்ளேபாய்னு சொல்லல்லியே?'' வெறுப்புக் கொப்பளிக்க வார்த்தைகளை விசினான். மகளை அவனுடன் பார்த்தபோது மற்றதெல்லாம் மறந்து போகத் தாய்மை விழித்துக்கொண்டது.

''நான் சுமந்த குழந்தை என் கண் முன்னாலே பாழாப்போறதை அனுமதிக்க மாட்டேன். நா இப்ப ஒரு மனைவியோ ரசிகையோ இல்லை. தாய். மஞ்சு ப்ளீஸ்வா, போகலாம்.''

''மம்மி, அது முடியாது. உன் பாஷைல சொல்லப் போனா, நீ ரன் அவுட் ஆயாச்சு. ஆட்டக்காரர் தனக்குள்ள வட்டத்துக்குள்ள இருக்கும்போது எந்தப் பந்து அங்க வந்து விழுந்தாலும் ஆபத்தில்லை. வட்டத்தை விட்டு வெளியே வந்துட்ட சமயம் பந்து விழுந்தா ஆட்டம் க்ளோஸ்.

உன் குடும்ப வட்டத்தை விட்டு நீ வெளிய வந்தாச்சு. ரன் அவுட் ஆவைங்களை மறுபடியும் ஆட்டத்தில சேக்கறதில்லேன்னு உனக்கு நல்லாத் தெரியுமே! நான் வரட்டுமா?''

ஆலு சர்ப்ரைஸ்

பெரிய உருளைக் கிழங்கு 8 எடுத்துக் கொண்டு வேகவைத்து மத்தினால் நன்றாக மசிக்கவும். இதில் உப்பு, தனி மிளகாய்ப்பொடி, பெருங்காயம், சேர்க்கவும். வாணலியில் சிறிது எண்ணெயை விட்டு 3 வெங்காயத்தை அரிந்து வதக்கவும். அத்துடன் 4 தக்காளியையும் பொடியாக நறுக்கிச் சேர்த்து உருளைக் கிழங்குக் கலவையுடன் சேர்த்துப் பிசையவும். மைதா மாவை நீர்க்கக் கரைத்துக்கொள்க. உருளைக் கிழங்கை வடை போல் செய்து மைதா மாவில் தோய்த்து எண்ணெயில் போட்டு எடுக்கவும்.

வெஜிடபிள் பிலாவை

ஒரு கப் மைதா மாவில் சிறிது உப்பு, அரை ஸ்பூன் பேகிங் பௌடர் போட்டுச் சலித்துக் கொள்ளவும். ஒரு எழுமிச்சம் பழ அளவு வெண்ணெயை மாவுடன் சேர்த்துப் பிசறிக் கொள்ளவும். குளிர்ந்த தண்ணீரைத் தெளித்து பிசைந்துகொள்க.

வெங்காயம், காரெட், உருளைக்கிழங்கு, தக்காளி இவற்றை உப்பு, மிளகாய்ப் பொடி சேர்த்து கூட்டைப் போல் செய்து கொள்ளவும்.

பிசைந்த மைதா மாவைப் பரத்தி 'பை' செய்யும் தட்டில் சிறிது வெண்ணெய் தடவி அதில் வைக்கவும். அதன் மேல் காய் கறி கூட்டைச் சமமாகப் பரத்தி வைத்து, மாவின் விளிம்பை ஓரத்தில் மடக்கிக் கொள்ளவும். இதன் மேல் ஆவக்காய் விழுதோ, வடு மாங்காய் தண்ணீரோ பரவலாக விடலாம். இதை 'ஓவனி'ல் 25 நிமிடம் வரை வைத்துக் கடவும்.

தமிழகத்தின்
சிறப்புகள்
எவை, எவை?

கோவில்,
கோபுரம்,
சங்கீதம்,
நாதஸ்வரம்,
பரதநாட்டியம்,
இட்லி,
தோசை,

நரசுஸ் காபி!

ஜவனுள்ள ஒரே காபி!

நரசுஸ்

"தெர்மலோ" காபி!

நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்:
தமிழ்நாடெங்கும்.

ADWAVE-NCC 2165

நிலத்தை எப்படி வாங்க வேண்டும்?

வீடு மனை நிலம் தங்கள் கற்பனை போல போல இருக்கும்!

நகரத்திற்கு மிக அருகாமையில் உள்ளது! இப்படி வெல்லாம் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வருகின்றன. மனை விற்பதில் வீட்டு மனைகள் விற்பதாகச் சொல்லியிருக்கும்! தனிமை முறையில் தருவதாகவும் சொல்லியிருக்கும். இவற்றைத் தீர விசாரித்து வாங்காமல், பேச்சு வார்த்தைகளுக்கு மயங்கி வாங்கிவிட்டுப் பிறகு அவஸ்தைப் படுபவர்கள் ஏராளம்.

அவர்கள் காட்டும் மனைகள் ஒரு அளவு இருக்கும். வாங்குபவர்கள் அளந்து பார்க்கும்போது வேறு மாதிரியாக இருக்கும். இதனால் பிற்பாடு வாங்குபவர்கள் தகராறு செய்வார்கள். இவர்கள் விடுவட்டவேறு சாலையும் மனைக் சாலையும் ஆகாது.

தனிமை முறையில் தருகிறோம் என்பவர்கள் ஒரு மாதம் கட்டத் தவறிவிட்டாலும் முதலாமவருக்குத் தெரியாமல் மற்றவருக்கு விற்று விடுவார்கள்.

இதனால் நீங்கள் கஷ்டப்பட்டுச் சேர்த்த பணத்தைப் போட்டு நிலம் வாங்கி இருப்பீர்கள்; மீதிக் காலமாவது தொல்லை இல்லாமல் அமைதியாக வாழ வேண்டும் என்பவர்கள் நேரில் விசாரிக்காமல் தொலைபேசியில் மாட்டிக் கொள்வார்கள்.

பேப்பரிலோ மற்ற வகைகளிலோ இப்படி மனை விற்பதாகச் சொல்பவர்கள் யாரும் அந்த நிலங்களின் சொந்தக்காரர்கள் அல்ல என்பதை முதலில் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பிறர் அந்த மனைகளை வாங்கி விற்று, லே-அவுட் செய்து விற்கும் இடைத் தரகர்களே.

''இதோ எதிர் மனை வாங்கி விருப்பவரே, ஒரு வாய்ப்பு. விலையும் தெரியாமலா அவர் வாங்கி இருப்பார்!''

ஏதாவது நீங்கள் சந்தேகம்கேட்கும்போதும் இப்படி உங்கள் வாயை அடைத்து விடுவார். ஆனால் அந்த மனையின் பத்திரம் வேறு மாதிரி இருக்கலாம். உங்களுடையது வேறு மாதிரி இருக்கலாம்.

முதலில் அவர்கள் காட்டும் லே-அவுட் பிளான், முறைப்படி 'சேங்ஷன்' ஆனதா என்று தெரிந்து கொள்ள வேண்டும். நகராட்சி இருந்தால் பெருநகர் வளர்ச்சி குழுமம் இருந்தால் பஞ்சாயத்து யூனியன் பிளானில் இவர்களும் இந்த பிளானுக்கு ஒப்புதல் தர வேண்டும். இப்படி பதிவுப்பட்ட மனைகள் விற்கும்போது பொது சொத்து இவ்வளவு அவசியம் இருக்க வேண்டும். நீங்கள் மனைகள் விற்கப்பட்டு பிற்பாடு பெரிய கலவரமாக உருவாகும் சாத்தியக் கூறு இருந்தால் அந்த இடங்களில் பார்க், விளையாட்டுத் திடல் போன்றவை, தாராளமாக் கட்டப்பட்டு இருக்க வேண்டும். முனைவில் நிறுத்த வேண்டிய இருந்தால்தான் சாத்தும், ஒலியும் இருக்கும். இப்படி வரப்போகும் அவசரமான தொலைவுக்கு, விற்பவர்கள் கண்டிப்பான தொலைவுக் கட்ட வேண்டும். அந்தத் தொலைவைக் கட்டாமல் இவர்கள் தான்தான் ஒரு லே-அவுட் போட்டுக்கொண்டு வாங்குபவர்களிடம் காட்டி விடுவார்கள்.

ஏதோ ஒரு பிளானைப் பார்த்துவிட்டு, முறையான பிளானைத்தான் எல்லா வாங்குபவர்கள் நம்பி விடுகிறார்கள். இதனால் பிற்பாடு வாங்கியவர்கள் வீடு கட்ட கடன் கேட்கும்போதுதான் எல்லோரை சோளாறு என்பது தெரிய வரும்.

அதே போல அத்தத்த மனைகளுக்கு பத்திரங்கள் சரியானதுதானா என்பதையும் பார்க்க வேண்டும். அதை விற்பவர் வாங்குபவருக்கு முழு சுதந்திரத்துடன் விற்கிறாரா, வாங்கியவர்கள் சம்பந்தப்பட்டவர்களா என்பதையும் பிளானைக் கடைப்பிடிக்காத – விற்கக் கூடாத – நிலத்தாரு என்றெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏதேனும் கூப்பறவு சொல்லப்பட்டிருந்தால் சுப்பர்ட் ஆபீசுகளிலோ அல்லது வக்கீல்களிலோ வீடு கட்டக் கடன் கேட்டால் இதை வெல்லாம் அங்கு கேட்பார்கள், விலையும் இல்லா நிலத்திலே வீடு கட்ட

கடன் கொடுக்கும். தும்பை விட்டு வாலைப் பிடித்த கதையாய் அலைவார்கள் முதலாளிகள் இருக்கிறார்கள்.

சமீபகாலமாக வீட்டுவசதிக்கோ அல்லது பல நிலையத்திற்கோ வெகு அருகாமையில் நிலம் வாங்க வேண்டுமென்று சிலர் ஆசைப்படுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பாலுள்ள நிலங்களையும் வரச் சொல்லி வாங்கி அலைத்துப் போக்கு காட்டுவார்கள். வாங்கி போகும்போது எல்லாவற்றையும் தாமும் மிகவும் அருகாமையாக்கி விடுவார்கள். அப்புறம் நிலம் வாங்கி விட்டோமே என்று வேறு வேலை செய்து இரண்டு மடங்கு தேடுவார்கள். எனவே போகும்போதே சரியாகத் தூரத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

நல்ல முறையில் விற்றிருக்கிறார்களா என்பதையும் சரியாகக் கவனிக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று மாதம் கட்டத் தவறிவிட்டால் நாம் கவனிக்காதிருப்பதைப் பல்லை எடுத்து ஒரு கல்யாணம் போட்டிருப்பார்கள். வாங்குபவர்கள் டிமிக்கியில் இருப்பார்கள். செலவையில் நிலம் பார்த்து மாதா மாதம் பணம் அனுப்புவார்கள். இங்கே என்ன நடக்கிறது என்று அவர்களுக்குத் தெரியாது.

கடைசி காரியமாக வாழ்க்கை முடித்து சீட்டாய் மேலட்டை ஆக பிறகு நாலாக கொண்டுவரும் இருக்கையாக எல்லா வரவு காண்பவர்களுக்கு அதிகம். கடைசியில் வந்து பார்த்தால் ஒன்று நிலம் வைத்தி இருக்கும். இல்லை வேறொரு இவர்கள் பார்த்த நிலத்திற்கும் இருக்கும் நிலத்திற்கும் சம்பந்தம் இருக்காது. போதாதற்கு இரண்டு மூன்று குடிசை வாசிகள் குடிசை போட்டுக் கொண்டு தகராறு செய்வார்கள்.

வெளியூரிலிருந்து கொண்டு வேறு ஊரில் நிலம் வாங்குபவர்கள் அந்த ஊரில் உள்ள யாரிடம் பொறுப்பை ஒப்படைக்கலாம். அல்லது அவ்வப்போது வந்து பார்த்துக் கொள்ளலாம். தான் அனுப்பும் பணத்திற்கு வரவு வைக்கப்படுகிறதா, நிலம் வருகிறதா என்பதை யெல்லாம் கவனிக்க வேண்டும்.

மனை வாங்க வேண்டும் என்ற நினைப்பே நிம்மதியாக வீட்டில் சொந்தக்காரர்களின் பிறுங்கல் இல்லாமல் வாழ்வதற்குத்தான். ஒரு குழியிலிருந்து மீண்டும் இன்னொரு குழியில் மாட்டிக் கொள்வதில் என்ன லாபம்? எனவே, வாங்கும்போதே, மனை, நிலம், வீடு இவற்றைப் பற்றி முழுமையாகத் தெரிந்த நண்பர்களிடம் விசாரித்தோ கேட்டோ, அல்லது பத்திரங்களின் நகலைப் பிளானின் நகலை ஒரு வழக்கறிஞரிடம் காட்டி விசாரிக்கலாம். கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தில் வாங்கும் நிலம் சுத்தமானது என்று தெரிந்த பிறகே வாங்க வேண்டும்.

அதற்காக,

பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படும் நிலங்கள்--

நல்ல முறையில் தருவதாகச் சொல்வது-

தெரிந்தவர்கள் மூலமாக வரும் மனை --

இவையெல்லாம் மோசடித்தனத்தின் சின்னம் என்று நினைத்து விடாதீர்கள். பொது மக்கள் பொதுப் பணம் கொடுத்து வாங்க முடியாது என அவர்களின் பொருளாதார வசதிக்கேற்ப தவணையில் விற்கிறார்கள். எங்கே நிலம் இருப்பது வேண்டுமென்பதும் தெரியாது. அதற்காகப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். 'ஐயோ இவர்கள் இவ்வளவு வாடகை கொடுத்துக் கஷ்டப்படுகிறார்களே' என இரக்கத்தோடு நண்பர்கள் நல்ல முறையில் வருகிறார்கள். எனவே அவர்களின் நல்லெண்ணம் நல்லது. ஆனால் இவர்களிடையே புகுந்துவிடும் நிறைய கெடுகின்றன. அதனால் நாம் முன் ஜாக்கிரதையாக இருந்து விட்டால் பிற்பாடு தலையில் கை வைத்துக் கொள்ளாமல் இருக்கலாம் இல்லவா?

--ஆ. ஜூ. ரமேஷ்

வயலைக்கொடி வடை

ஸ்வாமிக்கு வைக்கும் செம்பருத்திப் பூக்கள் மறுநாள் வாடி விடுகிறதல்லவா? இவற்றை தான வெய்யிலில் உலர்த்துங்கள். எண்ணெய்க் குளியலுக்கு மறுநாள் அல்லது தலையாணை பொடிகொள்ளும் வெந்தயத்தை அரைத்து (அரைவைத்தோ அல்லது மிக்ஸியில் பொடியாகவோ) கொஞ்சம் நீரில் இந்து நிமிடம் போடுங்கள். அதில் உலர்ந்த செம்பருத்திப் பூவைக் கொஞ்சம் அரைவைத்துக் கலக்குங்கள். சோப்பு மாதிரி வரும் நுரையைத் தலையில் தேய்த்து அலசுங்கள். விரும்பும் வாசம் இதனிடம் பிரசை வாங்கும். அத்தனை சுகமாகவும் பிசுக்கு விட்டும் தலையிருக்கும். தலை மயிருக்கும் கேடு இல்லை.

--ரோஜி

தினமும் எவ்வளவு செலவழிக்கலாம்?

அப்படியானால்—

நீங்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய இரண்டு விஷயங்கள்: வெயில் காலம். அதுவும் இந்த வருடம் கடுமையான வறட்சி தண்ணீர் பற்றாக்குறை. இடைக்கும் இலவசமாகக் கொடுக்கப்படுவது எனச் சொல்ல முடியாது. ஆகவே பேரும் இடங்களில்—

கூடியவரை தாகத்திற்கு வெள்ளரி, தர்பூசணி முலாம் பழங்கள் சாப்பிடுங்கள். காபி, டீ, இளைஞர்களுக்குப் பதில் மோர் அல்லது கடைகளில் விற்கும் கப் தயிர், வெயில் முதலியவைகளைக் குடியுங்கள். கொழுக்கும் காலத்து வறட்டுவைத் தவிர்க்கும். உடம்பு புத்தும் நல்லது.

இயற்கையாகச் சித்தரிக்கப்பட்ட சாலைகளில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். உடம்புக்கு மட்டுமல்ல; பர்ஸுக்கும் ரொம்ப நல்லது. குறைந்தது எண்ணெயில் பொரித்த பிக்கள். பஜ்ஜி போன்றவைகளுக்குப் பதில்—

பழ வகைகள், காரட், வெள்ளரி போன்ற காய்கறிகள், அரிசி பொரி, பட்டாணி. பொட்டுக் கடலை போன்றவைகளையே வாங்கித் தொடுங்கள்.

நீங்கள் நினைத்த நபர்கள் கூட்டமாகப் போவதாக இருந்தால்—

பச்சரிசி நான்கு பங்கு உளுத்தம் பருப்பு ஒரு பங்கு இரண்டையும் ஒன்றாக மிஷினில் கொடுத்து ரவையாகத் திரித்துக் கொள்ளுங்கள். தேவையான அளவு இஞ்சியைப் பொடியாக நறுக்கி வெயில் காலமானதால் அத்துடன் சிறிது நெய்யில் வறுத்த மிளகு, சீரகம், எலுமிச்சையும் ஒன்றாக தயிரில். டேபிள் சால்ட், நெய்யில் வறுத்த (மொறு மொறு என) கறிவேப்பிலை வாயும் ஒன்றாகக் கலந்து ஒரு சம்படத்தில் எடுத்துச் செல்லுங்கள்.

வேண்டும் சமயத்தில்— (ஒரு வாடை, ஒரு அடுக்கு ஒரு ஸ்பூன் போதும்)

ரவையைப் போல இரண்டரை பங்கு தண்ணீரைக் கொதிக்க வைத்து ரவையைக் கொட்டிக் கிளறுங்கள். அந்தச் சமயத்தில் வெண்ணெய் போன்ற பதத்தில் வந்ததும் தொன்னை மையில் எடுத்துப் போதும் சாப்பாட்டுப் பிரச்சினை மிகக் குறைந்த செலவில் தீரும். தண்ணீரும் கூட.

இதற்கே— தக்காளியில் தாளித்துப் போட்டு தக்காளி சாதமாகவும், காய் கறிகளை நறுக்கிச் சேர்த்து மிக்சியாகவும் தண்ணீர் குறைவாக விட்டு தேங்காய் திருவிப் போட்டு உப்புமா மாதிரியும் பல்வேறு விதங்களில் மாற்றி மாற்றிச் செய்யலாம்.

எல்லோருக்கும் காய்ச்சி, மத்த ஆறும் சேவைக்கும் பதில் எலுமிச்சை பழங்களை வாங்கி, பிழிந்து, சிறி சேர்த்து சர்பத் செய்து சாப்பிட்டால் சேவையும் மிச்சம்; சுண்டுகளை வராமல் காப்பாற்றும். சிறிது உப்பும் சேர்த்தும் பொடி செய்து எடுத்துக் கொண்டால் ஆகாரத்திற்குப் பின் தலை வாரிப் போட்டுக் கொண்டால் பெரு மலை வாழ்ந்த உபாதைகளைக் குறைக்கும்.

நல்ல வெயில் அடிக்க வேண்டிய நாள்— பலமாளான சோற்றை அல்லது தயிரைக் கரைத்து ஒரு வாய்ந்த எடுத்து உச்சந் தலையில் வைத்து அதன் மேல் ஸ்கார்ப்பை கட்டிக் கொள்ளுங்கள். வெயிலைச் சோற்றை வாங்கிக் கொள்வதால் சுண்டுகளை ஏற்படாது. டென்னி போன்ற தலைவலிக்கு இது மிகவும் அவசியம். மெல்லிய பருத்தி துணிகளையே உபயோகியுங்கள்.

பொதுவாக எந்த பொருளும் வாரப் பார்ப்பதாடு, உங்கள் உடல் ஆரோக்கிய நிலையும் பார்த்துக் கொண்டு, பர்ஸையும் அதிகம் இளைக்க விடாமல் பத்திரமாக வீடு வந்து சேருங்கள்.

எஸ். பட்டம்மாள்

காதில் பூச்சி புகுந்தால்?

டாக்டர் கு. கோபாலகிருஷ்ணன்

